[11th December 1961

Welfare of Scheduled Tribes

2240-I *Q.*—SRI T. S. RAMASAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Central Government have sent any communication to the State Government regardnig the starting of intensive Special Development Projects for the Develpoment of Scheduled Tribes in the State; and

(*b*) the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) The Government of India have allotted two Tribal Development Blocks to this State to cover Yercaud and Kolli Hills Blocks of Salem district. Steps will be taken for launching the blocks.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : May I know the gist of the communication?

THE HON. SRI C. SUBRAMANIAM : You can open what they call tribal blocks on the basis of population, i.e., 25,000 population and an area of 200 square miles. For non-scheduled areas with a tribal population of 55 per cent, we can open a tribal block.

SRI J. MATHA GOWDER : இதுபோன்ற மலைவாசிகள் அபிவிருத்தி ப்ராஜக்ட் அதிகமாக மலைவாசிகள் இருக்கக்கூடிய நீலகிரி ஜில்லாவில் ஏற்படுத்தாததன் நோக்கம் என்ன? அப்படியில்லை என்றால், அடுத்த முறையாவது இதுபற்றி அரசாங்கம் யோசிக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : நீலகிரி ஜில்லாவில் அதிகமாக ஆதிவாசிகள் இருப்பதாகத் தெரியவில்லை. அங்கு இருக்கக்கூடிய 'டிரைபல் பாபுலேஷன்' மொத்த தொகை 12,000 இருக்கிறது.

SRI A. GOVINDASAMY : தென் ஆற்காடு ஜில்லாவில் கள்ளக்குறிச்சியில் மலைவாசிகள் நிலைமையை உயர்த்துவதற்கு இந்தத் திட்டம் பரிசீலிக்கப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தத் திட்டம் ஸ்பெஷலாக 'ட்ரைபல் டெவலப்மெண்டு ப்ளாக்கு' ஏற்படுத்துவதற்கு போடப்பட்டிருக்கிறது. அதற்கு 25,000 'ட்ரைபல் பாபுலேஷன்' அந்த பிளாக்கில் 200 சதுர மைல் விஸ்தீரணத்திற்குள் இருக்க வேண்டும். அதுமாதிரி இருக்கிற இடங்களில்தான் இந்த பிளாக் ஏற்படுத்த முடியும். கள்ளக்குறிச்சியில் 'ட்ரைபல் பாபுலேஷன்' தொகை ரொம்ப கம்மி.

SRI S. M. ANNAMALAI : தேபர் கமிட்டி பார்த்த பிறகு ஜவ்வாது மலையில் மலைவாசிகளுக்கு தனி ப்ளாக் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லி கலெக்டர்கூட சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது. அதன் நிலை என்ன ஆயிற்று?

11th December 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தத் திட்டம் 'ட்ரைபல் பிளாக்' ஏற்படுத்துவதற்காக ஏற்பட்டது. இந்த இரண்டு இடங்களில் இந்த ப்ளாக் ஏற்படுத்துவதற்கான நிபந்தனைகள் சரியாக இருக்கின்றன. பாக்கி இடங்களில் இந்த நிபந்தனைகள் பூர்த்தியாகவில்லை. ஆகவேதான் கொள்ளி மலை, ஏற்காடு ஆகிய இரண்டு பகுதிகளிலும் இந்த மாதிரி 'ட்ரைபல் ப்ளாக்ஸ்' ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பொதுவாக 'ட்ரைபல் பாபுலேஷனுக்கு' என்ன உதவிவேண்டும் என்பதுபற்றி தனிக் கேள்வி கேட்கவேண்டும். அதற்கு மற்ருெரு மந்திரி பதில் சொல்லுவார்.

SRI A. GOVINDASAMY : கள்ளக்குரிச்சியில் 25,000 ஜனத்தொகை இல்லை என்பது உண்மையாக இருந்தாலும், தேர்தல் நேரத்தில் மலைப்பகுதி மக்களுக்கு வோட்டுச் சாவடிகளுக்கு வந்து வாக்களிப்பதற்கு ரோடு வசதி கிடையாது, பள்ளி ஆசிரியர்களுக்கு அந்த இடங்களுக்குப் போய் வேலை செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. ஆகையால் ஜனத்தொகையில் 10,000, 15,000 ஆதிவாசிகள் இருந்தால்கூட, அதை 'சப்-செண்டராக' கருதி அவர்களுக்கு விசேஷ சலுகை கொடுப்பதற்கு அரசாங்கம் சிந்திக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆதிவாசிகள் இருக்கக்கூடிய இடங்களில் அவர்களுக்கு விசேஷ சலுகை கொடுத்து, அவர்களை கல்வித் துறையிலும், சமுதாயத்தில் மற்ற துறைகளிலும் முன்னேறுவதற்கு ஆதிவாசிகளுக்கு தனித் திட்டங்கள் இருக்கின்றன. அந்தத் திட்டங்கள் அங்கு நிறைவேற்றப்படுகின்றன. 'ட்ரைபல் ப்ளாக்' ஏற்படுத்துவதற்கு அங்கு இப்பொழுது போதுமான ஜனத்தொகை இல்லை.

SRI C. NATARAJAN : கள்ளக்குரிச்சியில் ஆதிவாசிகளுக்கு என்று அந்தவிதமான திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். இருந்தாலும், பாலப்பட்டு மலைவாசிகளுக்கு என்று 'ப்ளாக்' ஆரம்பிக்கப்படுவதாக இருந்தது. அதற்கு இப்பொழுது வேறு காரணங்களைக் கொடுத்து, அது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதை அரசாங்கம் நடத்துவதற்கு ஆவன செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : வேறு எந்தத் திட்டம் ஆரம்பிப்பதாக இருந்தது என்று கனம் அங்கத்தினர் சொல்லுகிருர் என்பது தெரியவில்லை. இப்பொழுது 'ட்ரைப் ப்ளாக்' என்று சொல்லக்கூடிய வகையில் ஏற்காடு, கொள்ளி மலை ஆகிய இரண்டு இடங்களிலும்தான் நிபந்தனை சரியாக இருக்கிறது. ஆகலால் அந்த இரண்டு இடங்களிலும் 'ட்ரைபல் ப்ளாக்' ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு நடக்கிறது. கள்ளக்குரிச்சியில் உள்ள ஆதிவாசிகளுக்கு தனிப்பட்ட சலுகைகள் கொடுக்கவேண்டும் என்று சொன்னுல், அம்மாதிரி சலுகைகள் கொடுப்பதற்கு தக்க ஏற்பாடுகள் இப்பொழுதே செய்யப்பட்டிருக்கின்றன.

[11th December 1961

SRI M. K. SOMASUNDARAM : திருநெல்வேலி, கன்யாகுமரி ஜில்லாக்களில் ஒரு 'ஸோஷல் ஆர்கனைஸேஷன் ஆபீசர்' போட்டு, ஆதிவாசிகளின் முன்னேற்றத்திற்கு ஒரு திட்டம் வகுக்க முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆதிவாசிகளை முன்னுக்குக் கொண்டுவருவதற்கு தனித் திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டங்கள் இப்பொழுது நிறைவேற்றப்பட்டும் வருகின்றன.

Text-Books

2240-J *Q*.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the total cost of the books which a student studying in the 8th, 9th and 10th Standards, respectively; and

(*b*) whether there is any proposal to reduce (i) the cost of such books; and (ii) the number of books to be prescribed for such of those Standards?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) : Under the existing arrangements, text-books for detailed and non-detailed study in the languages for Standard X are prescribed by the department. The other text-books for Standard X and all text-books for Standards VIII and IX are selected by the managements of high schools from the list of books approved by the Text-Book Committee. The number of books prescribed by the authorities will be limited to the minimum required for each subject, according to the syllabus. As the books prescribed may vary from institution to institution, it is not possible to estimate the cost of a set of books required to be purchased by a student. There is no proposal to reduce either the cost or the number of books to be prescribed for these Standards.

SRI T. T. DANIEL : While appreciating the steps that have been taken by our Government in the matter of giving educational concessions to poor students, in view of the fact that a number of poor students have to purchase many books which are really very costly, will the Government think of finding out some scheme or granting some concession, by which the poor students may be able to purchase their text-books which will be very useful for them for studying and passing the examination?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am sure there will be many voluntary and charitable organizations to help the poor students. For Harijan students, the Harijan Welfare Department provides books free of cost. So various steps have already been taken. I do agree that if it is possible, the Government should be able to provide all these facilities free of cost but unfortunately we have not reached that stage.